**CC.No.** 81/2023

02.03.2024

எ.சா.1 <u>சந்தியாகு ஆரோக்கியம்</u>

<u>குறுக்கு விசாரணை.</u>

1) ராஜபாளையம் சிமெண்ட் & கெமிக்கல் நிறுவனத்தின் கூடுதல் இயக்குனராக கடந்த 2020-2021 மற்றும் 2021-2022 ஆகிய காலங்களில் பணிபுரிந்தேன். என்னிடம் காட்டப்படும் ராஜபாளையம் சிமெண்ட் &கெமிக்கல் limited நிறுவனத்தின் 2020-2021 ஆண்டு அறிக்கையில் எனது பெயர் இயக்குனர் என்று எனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி அறிக்கையை நான் தற்போது தான் பார்க்கிறேன் இது வரை பார்த்ததில்லை. இதுவரை Board of Director ஆக நான் எந்த கையொப்பமும் செய்ததில்லை. அந்த ஆவணத்தை எதிர் தரப்பில் தயாரித்துள்ளனர். என்னிடம் காட்டப்படும் 11.11.2021 தேதியிட்ட எனது ராஜினாமா கடிதத்தில் மேற்படி நிறுவனத்தின் இயக்குநர் பொறுப்பிலிருந்து என்னை விடுவித்துக் கொள்வதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அதில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான் அதில் எனது முத்திரை இல்லை. மேற்டிப **ராஜினாமா கடித நகல் எ.சா.ஆ.1 ஆகும்.**

2) புகார் மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் Annexure 1 மற்றும் 2 ஆவணங்கள் என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் அவை எனது வங்கிக் கணக்குப்பட்டியல்கள் ஆகும். மேற்படி ஆவணங்களில் Annexure 1 மற்றும் 2 ஆவணங்களில் எனது கையொப்பத்தை தவிர வங்கியின் முத்திரையோ கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். அவற்றில் வங்கியின் UTR Number உள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 ஆவணத்தில் ஏனைய இயக்குனர்களின் கையொப்பங்கள் இல்லை என்றால் சரிதான். எப்போதும் சான்றிட்ட ஆவணங்களில் ஒரு இயக்குனர் கையொப்பம் செய்தால் போதும். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணத்திலும் ஒரு இயக்குனரின் கையொப்பம் மட்டும் உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு தொகை எங்கள் நிறுவனம் எதிரிகளுக்கு கடனாக கொடுத்திருக்கிறது என்றால் ரூ.1 கோடி 68 லட்சம் வரவேண்டியிருக்கிறது. எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறேன் என்றால் 2018 ல் பிப்ரவரி ரூ.1 கோடியும், சூன் மாதத்தில் ரூ.1 கோடியும் கொடுத்திருக்கிறேன். எனது வழக்குப்படி ரூ.2 கோடியிலிருந்து ரூ.1 கோடி 68 லட்சம் நிலுவைத் தொகை போக பாக்கித் தொகையை எதிரி நிறுவனம் செலுத்திவிட்டது என்றால் வட்டியும் அசலும் கொஞ்சம் மட்டும் செலுத்தியுள்ளனர். மேற்படி வரவு செலவு தொகை இவ்வழக்கிற்கும் மட்டும் தான்.

3) எதிரிக்கு நாங்கள் கொடுத்த ரூ.2 கோடி ரூபாய் Vithai Distributers account லிருந்து கொடுத்தோம். இந்த இரண்டு கம்பெனிகளுக்கு கொடுத்த செக்குகளை தவிர inidivudal directors-லிருந்து இரண்டு காசோலைகளை கம்பெனிக்காக

பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. கம்பெனி தரப்பில் 2 வழக்குகளும் தனிப்பட்ட முறையில் 5 வழக்குகளும் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்த வழக்குகளுக்கு அனுப்பட்ட சட்ட அறிவிப்பில் மூன்று நிறுவனங்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் எதிரிகள் எனக்கு ரூ.10 கோடி ரூபாய் தர வேண்டி உள்ளது என சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எனக்கு ராசி ஆட்டோமொபைல் மற்றும் பிற நிறுவனங்கள் உள்ளது என்றால் ராசி ஆட்டோமொபைல் மட்டும் எனது நிறுவனம் ஆகும். இதைத்தவிர விதை டெக்னாலசிஸ், மெக்கன் செல் இன்சினியர்ஸ், யூனிகார்ப் இண்டஸ்ரியல் மினரஸ் பிரைவேட் லிமிடெட். வில்லியம் மோட்டார்ஸ், மேக்ரோகாம் அட்வான்ஸ் டெக்னாலசிஸ், ராயன் சாரா ஏஜென்சிஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய என்னைச் சார்ந்த நிறுவனங்கள் உள்ளன என்றால் சரிதான்.

4) பாபா சாலை ஆழ்வார் பேட்டை, சென்னையில ஜனதாசெம் என்ற கம்பெனிக்கு சொந்தமான இடத்தில் டிஸ்ரிபூட்ரஸ் விதை டெக்னாலசிஸ், மெக்கன் செல் இன்சினியர்ஸ், யூனிகார்ப் இண்டஸ்ரியல் மினரஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனங்கள் முன்பு இருந்தன. மேற்படி நான்கு நிறுவனங்களும் வாடகை செலுத்தாததால் வெளியேற்றுகை வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி நிறுவனங்களுக்கு எதிராக வெளியேற்றுகை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. ரூ.40 லட்சம் வரை வாடகை எங்கள் நிறுவனம் செலுத்த வேண்டி உள்ளது என்று சொன்னால் சரியல்ல. c.m.k ராஜேந்திரன் என்பவர் எதிரிகளின் கம்பெனிகளுக்கு நிதி ஆலோசகராக இருந்தார் என்றாலும் அவரே எங்கள் நிறுவனத்தின் இயக்குனராக இருந்தார் என்றால் சரிதான் . மேற்படி c.m.k ராஜேந்திரன் எதிரிகளின் நிறுவனத்திற்கு நிதி ஆலோசராக இருந்ததை பயன்படுத்திக் கொண்டு எங்கள் நிறுவனத்திற்கும் மற்றும் பல நிறுவனங்களுக்கும் காசோலைகளை எடுத்துச் சென்று கொடுத்தார் என்றால் தவறு. இது சம்பந்தமாக போலீசில் புகார் அளித்து நடவடிக்கை எடுக்காததால் ராஜபாளையம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச.பிரிவு 156(3)மனு தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டதன் பேரில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் சீராய்வு மனு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.15 வங்கிகணக்கு பட்டியலில் வங்கியின் முத்திரையும், கையொப்பமோ, Bankers Book evidence Act-ன் படி சான்றிதழோ , இருக்கிறதா என்றால் இல்லை. அவை கணிணியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதால் முத்தியோ, கையொப்பமோ தேவை இல்லை என அதில் கண்டுள்ளது.

5) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எங்களுடைய விதை டிஸ்டியூட்டர்ஸ் முகவரி 10.03.2023 அன்றும் பாவா சாலை விலாசத்தில்தான் உள்ளது என்றால் சரிதான்.

எங்கள் நிறுவனம் பாவா சாலை முகவரியில் இல்லை என்று சொல்லும் நிலையில் எதற்காக எங்கள் நிறுவனத்தின் சட்ட அறிபிப்பில் மேற்படி முகவரியை குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் அது எங்கள் நிறுவனத்தின் முந்தைய முகவரி என்பதால் குறிப்பிட்டு இருக்கிறேன். எதிரி நிறுவனத்திற்கு கடன் கொடுத்ததாக சொல்லும் தொகையை எங்களது வருடாந்திர கணக்கு, மற்றும் Balance sheet-ல் சொல்லியிருக்கிறேனா என்றால் நினைவில்லை. இது குறித்து எங்கள் நிறுவத்தின் வருமான வரி கணக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் நினைவில்லை. மா.சா.ஆ.1 Master Data-ல் பதிவு செய்யப்பட்ட முகவரியாக 25/13 பாவா சாலை, ஆழ்வார்பேட், சென்னை என்று கண்டுள்ளது என்றால் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது இருந்த முகவரி ஆகும் மேற்படி ஆவணம் 15.04.2023, 1.29 P.M.என குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அது ம.சா.ஆ. 1 ஆவணம் பதிவிறக்கம் செய்யப்பட்ட தேதியாகும்.

6) எங்கள் நிறுவனம் M-sand எதிரியின் நிறுவனத்தில் இருந்து வாங்குவது வழக்கம் என்றால் இல்லை. எதிரியின் நிறுவனத்திலிருந்து எனது நிறுவனமோஅல்லது சகோதர நிறுவனமோ (Sisters concern) M-sand வாங்கவது வழக்கம் என்றால் இல்லை. எனது பிரமானவாக்குமூலத்தில் 3வது பத்தியில் எங்களது நிறுவனம் லிம்நாப் கெமிக்கல்ஸ்-ன் வாடிக்கையாளர் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வாடிக்கையாளர் என்று சொன்னால் லிம்நாப் கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து M-sand போன்ற பொருட்களை எங்கள் நிறுவனம் வாங்கியிருப்பதாக பொருள் கொள்ளலாமா என்றால் இல்லை. வாடிக்கையாளர் என்றால் என்ன பொருள் என்றால் பழக்கம் என்பதால் அவ்வாறு சொல்லியிருக்கிறேன். லிம்நாப் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் இயக்குனர்களிடம் இருந்து இவ்வழக்கு தொகைக்காக தனிப்பட்ட முறையில் காசோலை பெற்றிருக்கிறேனா என்றால் இல்லை இவ்வழக்கு தொகைக்காக பெறவில்லை. எனது தனிப்பட்ட கடனுக்காக காசோலை பெற்றிருக்கிறேன்.

7) எனது பிரமான வாக்கு மூலத்தில் 7வது பத்தியில் 4வது எதிரி பல்ராம் மனைவியிடம் இருந்து இவ்வழக்கு தொகைக்காக காரண்ட்டி லெட்டர் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரியின் நிறுவனம் எங்கள் நிறுவனத்திற்கு ரூ.2 கோடி செலுத்தவேண்டும் என்று ஏதாகிலும், உறுதியான, தீர்க்கமான சான்றுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு எங்கள் நிறுவனம் கடன் கொடுத்திருந்தால் அது வருடாந்திர கணக்கிலும், வருமான வரி கணக்கிலும் காண்பிக்கப்பட்டு அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திற்கு எதிரிகள் கடன் செலுத்தவேண்டும் என்று வழக்கிற்காக எடுத்துக்கொண்டாலும், அத்தொகையானது எங்கள் நிறுவனத்தின் சகோதர நிறுவத்திற்கு முதலீடு செய்யப்பட்ட தொகை என்றாலும், அது கடன் அல்ல

என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையான சி.எம்.கே. ராஜேந்திரன் என்ற எங்கள் நிறுவன இயக்குநரால் எதிரியின் நிறுவனத்திலிருந்து எடுக்கப்பட்டு அல்லது திருடப்பட்டு எங்களிடம் கொடுக்கப்பட்டதை எங்கள் நிறுவனம் தவறாக பயன்படுத்தி உள்ளது என்றால் சரியல்ல. எதிரி எங்கள் நிறுவனத்திற்கு எவ்வித பாக்கியும் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் இவ்வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என்றாலும், அவற்றில் உண்மை தன்னை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவுநீதிபதி, காரைக்குடி.